Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 889

மலர் 10
இதழ் 36

National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் [illegible] பங்குனி 4 ஜுல்ஹஜ்17 ஞாயிற்றுக்கிழமை (17-3-68)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




[illegible]லர் கோர்ப்பரேஷன்
[illegible] கொழும்பு

# கச்சதீவு யாத்திரிகர்கள் பகலில் பிரயாணம் செய்ய வேண்டும்

## கரையூர் துறையிலிருந்து படகுகள் புறப்படலாம்

### காரியாதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கச்சதீவுக்கு இம்முறை யாத்திரை செல்லும் பிரயாணிகள் பகலிலேயே யாத்திரை செல்லவேண்டுமென்றும் கரையூர் துறையிலிருந்தே அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எச். ஈ. புள்ளநாயகம் அறிவித்துள்ளார்.

இப்பகுதி மக்களுக்குச் சகல கிராமசேவையாளர்கள் மூலமாக அவர் பின்வருமாறு ஆலோசனை கூறியிருக்கிறார்.

கச்சதீவுத் திருநாளுக்குச் செல்லவிரும்பும் எவரும் பகலிலேயே தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும். அதுவும் கரையூர் துறையிலிருந்தே அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டும். இல்லையெனில் அவர்கள் அப்பகுதிக் கடல் பிராந்தியத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் கடற்படையினர் இராணுவம், பொலிஸ், சுங்கப்பகுதியினரின் சோதனைக்குள்ளாகிக் கைதாகவும், தண்டனைக்குள்ளாகவும் நேரிடலாம்.

கச்சதீவுக்குச் செல்வோர் வியாபார நோக்கத்துடன் எப்பொருளையும் கொண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு துறைமுகத்தில்

## வர்த்தக ஊழியர்கள் இன்று முழுவேலை நிறுத்தம்

கொழும்பு, சனி

கொழும்புத் துறைமுகத்தைச் சேர்ந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் இன்று வரும் நாளை முழு நாளும் வேலை நிறுத்தம் செய்யவிருக்கிறார்கள்.

இன்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை இந்த ஊழியர்கள் நடத்தினர்கள். அதன் பின் நடத்திய கூட்டமொன்றில் நாளை முழு நாளும்வேலைநிறுத்தம் செய்வதென்று முடிவுசெய்தார்கள். இந்த வேலைநிறுத்தம் திருக்கோணமலைத்துறைமுக ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக நடத்தப்படவிருக்கின்றது.

## டாக்டர் பீரிஸ் ரஷ்யாவில் தூதர் பதவி

கொழும்பு, சனி

டாக்டர் எம். வி. பி. பீரிஸ் ரஷ்யாவில் இலங்கை தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். ரஷ்யாவில் இலங்கை தூதராகவிருக்கும் திரு. வி. எஸ். பெரேரா இலங்கைக்கு திரும்புவாரெனத் தெரிகின்றது.

## யாழ்ப்பாண பாடசாலைகளில் மேலதிக பட்டதாரிகளாம்

### 'இடமாற்றத்தில் அரசியல் தலையீடு'

### அமைச்சர் நியமித்த குழு கண்டுபிடிப்பு

கொழும்பு, சனி

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் மேலதிகமாகப் பட்டதாரி ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும் இதனால் சிலர் குறிப்பிட்ட அளவு நேர வேலை செய்யாதிருப்பதாகவும் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட கல்வி அதிகாரிகளைக் கொண்ட குழு தெரிவித்துள்ளது.

ஆசிரியர் இடமாற்றம் வேலைநேரம் ஆகியன சம்பந்தமாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட இக்குழு ஆசிரியர் இடமாற்ற விஷயத்தில் அரசியல்தலையீடுமிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

பத்துவருடங்களுக்கு மேல் வடபகுதியில் சேவைசெய்தவர்களில் அதிகமானவர்களே இடமாற்றம்செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு பத்து வருடங்களுக்கு மேல் வெளியிடங்களில் கடமையாற்றியவர்கள் வடபகுதிக்கு வருவதை அரசியல் தலையீடுகள் தடுத்து வருவதாகவும் குறிப்பிட்டசில காலத்துக்காவது இவர்கள் யாழ்ப்பாணப்பகுதியில் கடமையாற்ற முடியாத நிலையில் இருப்பதாகவும் இக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

#### கல்வி அமைச்சர் கருத்து

இடமாற்றம் சம்பந்தமாக கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ இரியகொல்லை தெரிவிக்கையில் இடமாற்றத்தால் வடபகுதியின் கல்வித்தரம் குறைந்து விட்டதாகக் கூறுவதில் ஆதாரமேதுமில்லையெனவும் வட வடபகுதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டவர்களைவிடச் சில, சமயங்களில்தரம் கூடிய ஆசிரியர்கள் இப்பகுதிக்கு [illegible]டுள்ளார்களெனவும் கூறினார்.

## அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணை

### எதிர்க்கட்சியினர் தாக்கல்

கொழும்பு, சனி

அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவர எதிர்க்கட்சித் தலைவர்கள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சித்தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா உட்பட பல தலைவர்களும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கைபோக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. ஆர். ரி. டி. சில்வாவை மீண்டும் அப்பதவியில் இருத்தியதுகுறித்து அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குற்றஞ்சாட்டியுள்ளனர். பார்லிமெண்டின் அடுத்தமாத கூட்டத்தொடரில் இப்பிரேரணைமீது விவாதம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தாயும் மகனும் நஞ்சுக்கு பலி

முல்லைத்தீவு, சனி

தாயும் மகனும் ஒரே நேரத்தில் கிருமிநாசினி குடித்து தற்கொலை செய்த சம்பவம் முல்லைத்தீவைச் சேர்ந்த முள்ளியவளையில் நடந்தது.

முள்ளியவளை இராமுப்பிள்ளை பெண் செல்லம்மா வயது [55] மகன் இராமுப்பிள்ளை பொன்னம்பலம் வயது(22) ஆகிய இருவரும் அலகரைவெளி என்னுமிடத்தில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த நேரத்தில் இருவருக்கும் ஏற்பட்ட தகராறுகாரணமாகஇப்பரிதாப முடிவு ஏற்பட்டதாம்.

கிருமிநாசினி குடித்ததாக ஆபத்தான நிலையில் மேற்படி இருவரையும் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்று அங்கு மரணமான இருவரது மரணவிசாரணையை அளம்பில் மரண விசாரணை அதிகாரி திருஎவ். ஏ. பெர்னாண்டோ முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் நடாத்தினார்.

காலஞ்சென்ற செல்லம்மாவும் மகன் பொன்னம்பலமும் வயலில் வேலைசெய்துகொண்டு நின்றபோது காலஞ்சென்ற மகன் பொன்னம்பலம் வீட்டுக்குப் போக வேண்டும் என்று கேட்டபோது தாயான காலஞ்சென்ற செல்லம்மா 'நீபோனல் ஒரேபோக்காய் போ இங்கு வரவேண்டாம்" என்று கூறியதாகவும் இதை கேட்ட மகன் உடனே ஓடிப்போய் போத்தல் ஒன்றை எடுத்து அதில் இருந்ததை பருகியதாகவும் இதைக் கண்ட தாய் போத்தலைப்

[8-ம் பக்கம் பார்க்க]

## அண்ணா அடுத்தமாதம் அமெரிக்கா செல்வார்

சென்னை, மார்ச், 16

தமிழக முதலமைச்சர் திரு. சி. என் அண்ணாதுரை அடுத்த மாதம் பிற்பகுதியில் அமெரிக்காவுக்குப் போகக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு வருகை தரும்படி அமெரிக்க அரசாங்கம் சென்னையிலுள்ள அதன் பிரதிநிதிமூலம் அழைப்பு விடுத்திருந்தது. அந்த அழைப்பை திரு. அண்ணாதுரை ஏற்றுக்கொண்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் சபாநாயகர்

குரும்பசிட்டி, சனி

ஜனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகரும் சிலாபம்எம். பி. யுமான திரு. ஷேர்லி கொரியா இன்று முற்பகல் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா முதலில்

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

இசைவகுப்பு:
எக்கோடியன்—கிட்டார், மிருதங்கம், மென்டோலின் முதலிய வாத்தியபயிற்சி அளிக்கப்பெறும். நாதவி மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1602

மாதிரிகை விஞத்தாள்கள்:
ஆறும் வகுப்பு முதலாம் பருவப் பரீட்சை மாதிரிகை விஞத்தாள்கள் எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனி கிடைக்கும். ஆசீர்வாதம் புத்தகசாலை, கண்டி வீதி, (கிளை: 61, பெரியகடை, ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம். 1606

வகுப்புகள்
தபால் மூலம் கணக்கியல் (Accounts) கற்பிக்கப்படும். முதலாம் பாடத்திற்கும் விபரங்களுக்கும் ஒரு ரூபா அனுப்பவும். நந்தினி வித்தியாலயா, 280, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 1613

### தேவை

யாழ் நகர எல்லைக்குள் வசிக்கும் கஷியர் ஒருவர் தேவை. ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தர் விரும்பத்தக்கது. கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 1786

### விற்பனைக்கு

காணி:
கோப்பாய் தெற்குகட்டப் பிராய் பிறக்கிருசி இன்னத்துரை வீட்டுக்கு முன்பக்கமாக 2பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் வியாபாரம் செய்வதற்கும் வசதியான காணியாகும் விலை ரூபா 15,000 வரை வரும். விரும்பியோர் கீழ்க்கண்ட விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 1611, ஈழநாடு மே/பார்த்து, யாழ்ப்பாணம். 1611

### தவறிவிட்டது

மூக்குக்கண்ணுடி
கறுப்புநிறமுள்ள பிறேம் போடப்பட்ட மூக்குக்கண்ணுடியொன்றுதோலால்செய்யப்பட்ட கூட்டுடன் 14-3-68-ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். 1612

## வலிகாமம் மத்திய பாடசாலைகள் பேச்சுப் போட்டி முடிவுகள்

மானிப்பாய், சனி
வடமாகாண ஆசிரியர் சங்கம் பாடசாலைகளுக்கிடையே நடாத்திவரும் பேச்சுப்போட்டியில் வலிகாமம் மத்திய பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளின் போட்டி முடிவுகள் வருமாறு:—

கீழ்ப்பிரிவு ஆண்கள் (தமிழ்) எஸ். பரமானந்தம் (மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை) ரி. நாகரத்தினம் (மெமோறியல் ஆங். பாடசாலை] எஸ். சுந்தரேஸ்வரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

மத்திய ஆண்கள்:- என். சிவகுமார் [மானிப்பாய்இந்துக்கல்லூரி) எஸ். செல்வராசா [மான்ஸ் பாடசாலை] கே. சிவலிங்கம் (மெமோறியல் ஆங்கில பாடசாலை]

மேற்பிரிவு ஆண்கள்; பி. தணிகாசலம் (மானிபபாய் இந்துக்கல்லூரி) ரி. சற். பாகர்ஸ் [மானிப்பாய் இந்துக்கல்லூரி) எஸ். பாலகிருஷ்ணன் [சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி[

கீழ்ப்பிரிவு பெண்கள்:- கே. கலையரசி (மானிப்பாய் மகளிர் கல்லூரி] கே. சித்திரா [மானிப்பாய் மகளிர் கல்லூரி) கே. கிருஷ்ணலீலா [சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி] வி. பத்மினி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி] ஏ. சந்தானலட்சுமி (மெமோறியல் ஆங்கில பாடசாலை]

மத்திய பிரிவு பெண்கள் ஜே. மேரி [நவாலி மகாவித்தியாலயம்) வி. சாந்தி (மானிப்பாய் மகளிர் கல்லூரி] எஸ். சுகிர்தமலர் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி]

மேற்பிரிவுபெண்கள்:-எஸ். சந்திராதேவி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) எஸ். விஜயலட்சுமி [சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி] பி. சரோஜினி [மானிப்பாய் மகளிர் கல்லூரி]

அதிமேற்பிரிவு பெண்கள்: ஏ. புஷ்பராணி நவாலி மகாவித்தியாலயம்]

அதிமேற்பிரிவு ஆண்கள்: கே. மங்களமூர்த்தி [மானிப்பாய் இந்துக்கல்லூரி] கே. மனமோகன் [மானிப்பாய் இந்துக்கல்லூரி]

கீழ்ப்பிரிவு [ஆங்கிலம்]
எஸ். விமலநாதன் [மானிப்பாய் இந்துக் கல்லூரி] ஏ. ஜெயசீலன் (மெமோறியல் ஆங்கிலபாடசாலை[ கே. தர்மராஜன் [மானிப்பாய் இந்துக்கல்லூரி]

மத்திய பிரிவு ஆண்கள்: எம். ஜெகதீஸ்வரன் [மானிப்பாய் இந்துக் கல்லூரி) எம். ஜெயமனோகரன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி] எம். தேவராசா (மெமோறியல் ஆங்கில பாடசாலை)

மேற்பிரிவு ஆணகள்: ரி. சற். பாகர்ஸ் (மானிபாய்இந்துக்கல்லூரி) என். சந்திரகுமார் [மானிப்பாய் இ. கல்லூரி) பி. தணிகாசலம் [மானிப்பாய் இ கல்லூரி]

அதிமேற் பிரிவு ஆண்கள்: கே. மங்களமூர்த்தி [மானிப்பாய் இந்துக்கல்லூரி[

கீழ்ப்பிரிவுபெண்கள்; எல். மணிமேகலை [மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை] ரி. மனோரஞ்சிதமலர் [மெமோறியல் ஆ. பாடசாலை] ஏ. சந்தானலட்சுமி மெமோறியல் ஆ. பாடசாலை]

மத்திய பிரிவு பெண்கள்: எஸ். நளினசனி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) வி. சாந்தி (மானிப்பாய் ம. கல்லூரி) எம். விஜயாம்பாள் (மானிப்பாய் மகளிர் கல்லூரி

மேற்பிரிவு பெண்கள்: எஸ். சுசிலா [மானிப்பாய் ம. கல்லூரி[ கே. செருணி (மானிப்பாய் ம. கல்லூரி[ கே. பதிமதேவி [மெமோறியல் ஆங்கில பாடசாலை)

## பரிபாலனசபைக் கூட்டம்

உடுவில், சனி
சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் கோவில் பரிபாலனசபையின் முதலாவது ஆண்டுக்கூட்டம் நாளை மாலை மேற்படி கோவில் மண்டபத்தில்நடைபெறும். நடப்புவருடத்தில் 15 அங்கத்தவர்களைக் கொண்ட தர்மகர்த்தா சபையொன்றும், 2 கணக்கு பரிசோகர்களும் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர்.

## அபராதம்

ஊர்காவற்றுறை, சனி
காரைநகர் கிழக்கு வாசிகளான ஆர். கந்தசாமி, எஸ். கந்தன், எஸ். தம்பிராசா ஆகியோருக்கு சூதாடிய குற்றத்திற்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் தலா ரூபா 20 அபராதம் விதித்தார்.

## 'டாக்ஸியும் பஸ்ஸும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு
பஸ் ஒன்றைத் தவறவிட்ட ஒருவர் டாக்ஸி ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று அந்த பஸ்ஸில் ஏறினாராம். இதற்குக் காரணம் இன்னொரு பஸ் குறித்த நேரத்தில் பஸ் நிலையத்துக்கு வரத் தவறியதுதானும்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்றது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பருத்தித்துறை வாசி ஒருவரே இவ்வாறு கஷ்டத்துக்குள்ளானவராவார்.

கொழும்பிலிருந்து யாழ்தேவி புகையிரதத்தில் யாழ்ப்பாணம் வந்த இவர் புகையிரத நிலையத்திலிருந்து பஸ் ஒன்றிலேயே யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு வந்தாராம். யாழ்தேவியில் வரும் பிரயாணிகளை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைவரை ஏற்றிச் செல்லும் பஸ்ஸில் இடம் பிடிக்கவென வந்த இவர் பஸ் நிலையத்தை அடைந்தபோது குறிப்பிட்ட பஸ் சில நிமிடங்களுக்கு முன்னர் தான் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு நின்ற டாக்ஸி ஒன்றை வாடகைக்கு அமர்த்திய இவர் குறிப்பிட்ட பஸ்ஸை ஆனைப்பந்தியில் நிறுத்தி பஸ்ஸில் இடம் பிடித்தாராம். இத்தனைக்கும் இவர் புகையிரதநிலையத்திலிருந்து பஸ்நிலையத்துக்கு வந்த பஸ் இரு நிமிடங்கள் பிந்தி வந்ததே காரணம் என இவருக்குத் தெரிவிக்கப்பட்டது [கா. நி]

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
சுதுமலை சிவன் கோவில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 19-ம்திகதி நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

## செம்பியன்பற்று கிராமசபை கேள்விவிளம்பரம்

வேலைகள்:
1. உலாந்தாக் காட்டு ரோட்டு.
2. தாளையடி ஆழியவளை மீன்பிடி ரோட்.

மேற்படி வேலைகளுக்கு 29-3-68 காலை 10-30 முன் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. உரிய பத்திரங்கள் 26-3-68 பி.ப 2-30க்கு முன் வழங்கப்படும்.

கேள்விப்பிணையாக ரூபா 50/-ம் பத்திரப்பணமாக ரூபா 10/-ம் அறவிடப்படும். முன்பு இவ்வேலைக்குப் பத்திரம் பெற்ரோர் பணம் கட்ட வேண்டியதில்லை.

மற்றும் விபரங்களைச்சபை அலுவலகத்திலும், யாழ்ப்பாண உள்ளூராட்சி அமைச்சின் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

ஐ ஆ. ஐயம்பிள்ளை,
கி. ச. தலைவர்.

கிராமசபை,
செம்பியன்பற்று.
14-3-1968. 492

## கிணற்றில் விழுந்து மரணம்

ஊர்காவற்றுறை, சனி
காரைநகர் வடக்கு கந்தையா கைம்பெண் முத்தாச்சிப்பிள்ளை (75வயது) என்னும் பெண் தற்செயலாய் கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார். மரண விசாரணை அதிகாரி திரு. க. கந்தசாமி விசாரணை நடாத்தினார். தற்செயலாய் கிணற்றில் விழுந்ததால் மரணம் சம்பவித்தது எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

## சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறை, ஞாயிறு
கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஸ்தாபனத்தில், புனித சூசையப்பர் திருநாள் இம் மாதம் 19-ம் திகதி நடைபெறவிருக்கிறது அன்று காலை 6.00 மணிக்கு பலி பூஜையும் நடைபெறும்


ராதா மணிமார்க்

# சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர்ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

58, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068



84வது தினம்!
## ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில்4காட்சி
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
## காவல்்காரன்



2-வது மாதம்
## நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த
## மறக்க முடியுமா?



## MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45p.m.
Frnest Borgnine
Goe Flynn
in
McHALES NAVY



## REGAL JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m
George Hamilton&
Carrol Baker
in
JACK OF DIAMONDS



இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] | விஜிதா [ஹட்டன்]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் ராஜினாமா

## அரசாங்கம் நடத்தப்படும் முறையில் அதிருப்தி

லண்டன், மார்ச் 16

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி, திரு. ஜோர்ஜ் பிரவுண், நேற்று பிரிட்டிஷ் மந்திரி சபையிலிருந்து ராஜினாமாச் செய்தார்.

உலக நிதி அரங்கில் ஏற்பட்டுள்ள தங்க நெருக்கடியின் மத்தியில், தமது மந்திரி சபைச் சகாக்களுடன் ஏற்பட்ட தகராறு காரணமாகவே திரு. ஜோர்ஜ் பிரவுண், தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

புதிய வெளியுறவு மந்திரியாக திரு. மைக்கேல் ஸ்டீவாட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 1964-66-ல் வெளியுறவு மந்திரியாகக் கடமையாற்றியவர். இவரிடமிருந்து தான் 1966-ல் திரு. பிரவுண் பதவியேற்றார்.

வெளியுறவு இலாகாவுடன் சாம்ராஜ்ய அலுவலகமும் இணைக்கப்படுமென்றும், இரண்டு இலாகாக்களும் திரு. மைக்கேல் ஸ்டீவாட்டின் கீழிருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதவியிலிருந்து விலகும் திரு. ஜோர்ஜ் பிரவுண் தமது ராஜினாமாக் கடிதத்தில், அரசாங்கம் நடத்தப்படும் முறையிலும், முடிவுகள் எடுக்கப்படும் விதத்திலும் தாம் அதிருப்தியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஐரோப்பிய தங்க கூட்டு நாடுகள்

## வாஷிங்டனில் சந்திப்பு

வாஷிங்டன், மார்ச் 18

ஐரோப்பிய தங்க கூட்டுச் சேர்க்கை நாடுகள், இன்று வாஷிங்டனில் கூடுகின்றன.

தங்கத்துக்கு ஏற்பட்ட பலத்த கிராக்கி மூலம் சர்வதேச நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகளை எடுக்கவே, இந் நாடுகள், அமெரிக்காவின் அழைப்பில் இங்கு கூடுகின்றன.

அமெரிக்காவுடன் மற்றும் பிரிட்டன், சுவிட்ஸர்லாந்து பெல்ஜியம், நெதர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளும் இந்த ஐரோப்பிய கூட்டு சேர்க்கையில் அங்கம் வகிக்கின்றன. பிரான்ஸ், கடந்த ஜூன் மாதம், இந்தக் கூட்டிலிருந்து விலகிவிட்டது.

இதற்கிடையில், பிரிட்டனில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைத் தவிர்க்க உதவு முகமாக, பல கோடிக் கணக்குப் பெறுமதியான தங்கக் கட்டிகளை அமெரிக்கா, விமானமூலம் பிரிட்டனுக்கு அனுப்பிவைத்துள்ளது.

# ரொடீஷியா பிரச்னையை விவாதிக்க பந்தோபஸ்து சபை கூடுகிறது

நியூயோர்க், மார்ச் 16

ரொடீஷியப் பிரச்னையை விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்து சபை செவ்வாய்க்கிழமையன்று கூடவிருக்கிறது.

சபையின் அக்கூட்டத்தில் ரொடீஷியாதூக்கிலிட்ட ஆபிரிக்கர்கள் விஷயமுட்பட ரொடீஷியப் பிரச்னை முழுமையாக எடுக்கப்படுமெனத் தெரிகிறது.

அத்துடன், இதுவரைகாலம் ரொடீஷியாவுக்கெதிராகச் சபை விதித்திருந்த தடைகளின் தோல்வி குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

## ரொடீஷியாவுக்கெதிராக உலக பொருளாதாரத் தடை

### பிரிட்டிஷ் ஆதரவு

லண்டன், மார்ச் 16

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காரியதரிசி திரு. தொம்ப்ஸன், பொருளாதார ரீதியில் ரொடீஷியாவுக்கெதிராக உலகத்தடை இயற்றுவதில் பிரிட்டனும் ஒத்துழைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

சாம்ராஜ்ய நாடுகளின், ரொடீஷியாவுக் கெதிரான பொருளாதாரத் தடைக் கமிட்டியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இக்கமிட்டியில். 28 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஆனாலும், ரொடீஷியாவுக்கெதிராகப் பலாத்கார நடவடிக்கைகள் எடுப்பதை தமது நாடு அங்கீகரிக்காது என்று திரு. தொம்ப்ஸன் வலியுறுத்தினார்.

## ரொடீஷியா குடியரசாகும் என்கிறார் அயன் ஸ்மித்

சாலிஸ்பரி, மார்ச் 16

இதற்கிடையில், ரொடீஷியாவை ஒரு குடியரசாக்கும் வழியில் பிரிட்டன் நடந்துகொள்வதாக ரொடீஷியப் பிரதமர் திரு. அயன் ஸ்மித் கூறியுள்ளார்.

நேற்று நாடெங்கும் ஒலிபரப்பப்பட்ட டெலிவிஷன் பேட்டியொன்றில் தோன்றிப் பேசுகையில், ரொடீஷியா குடியரசாக மாறுவதற்கு பிரிட்டனின் நடவடிக்கைகள் பலவந்தப்படுத்துவதாக திரு. அயன் ஸ்மித் தெரிவித்தார்.

ரொடீஷியாவைக் குடியரசாக்குவதுபற்றி, அரசியற் சாஸனக் கமிஷனின் அறிக்கை வெளிவந்ததும் முடிவு செய்யப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஐ. நா. கோரிக்கை

### தென்னாபிரிக்க பிரதமர் நிராகரிப்பு

பிரிட்டோரியா, மார்ச் 16

தென்னாபிரிக்கப் பிரதமர் திரு. வோஸ்டர், தமது அரசாங்கம் கைது செய்த 33 தென் மேற்கு ஆபிரிக்கர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற ஐ. நா. பந்தோபஸ்து சபைக் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

## ஆஸ்பத்திரியிலிருந்து பிளேய்பேர்க் வெளியேறுகிறார்

கேப்டவுண், மார்ச் 16

உலகில் உயிருடன் வாழும் ஒரேயொரு மாற்று இருதயக்காரரான டாக்டர் பிளேய்பேர்க், இன்று ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறுவார்.

இத்தகவலை உலகில் முதல் முதலாக மாற்று இருதயச் சிகிச்சையை நடத்தியவரான தென்னாபிரிக்க டாக்டர் பேனாட் அறிவித்துள்ளார்.

## ரயில் விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர்

மாட்ரிட், மார்ச் 16

ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட் அருகே நேற்று நடந்த ரயில் விபத்தொன்றில், 26 பேர் உயிரிழந்தனர். மற்றும் 80 பேர் காயமடைந்தனர்.

கடுகதி ரயில் ஒன்று, மற்றொரு சாதாரண ரயிலுடன் மோதியதன் விளைவாகவே இவ்விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## சீன - அரபு உறவுகள்

கெயிரோ, மார்ச் 16

அரபு நாடுகளுடனான சீனாவின் உறவுகள் மேலும் கீழிறங்கியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது

பீகிங்குக்கு விஜயம் செய்யவிருந்த சமன் பிரதமர் திரு. எம்லி, தமது சீன விஜயத்தைக் கடைசி நேரத்தில் ரத்துச் செய்து விட்டார்.

கெயிரோ வந்திருந்த அவர் அடுத்த வியாழனன்று சீனா செல்ல உத்தேசித்திருந்தார். ஆனால், பயணத்தை [illegible] விட்டார்.

## அமெரிக்க

# ஜனாதிபதி தேர்தலுக்கு ஜோன்சன் நிற்பது நிச்சயம்

வாஷிங்டன், மார்ச் 16

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் நவம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் அபேட்சகராக மீண்டும் போட்டியிடமுடிவுசெய்துள்ளார் என்பது இப்போது நிச்சயமாகிவிட்டது.

இத்தகவலை அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஹம்பரி நேற்று ரேடியோவில் வெளியிட்டார்.

## ரொபேட் கென்னடியும் போட்டியிடுவார்

இதற்கிடையில், அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது எனக் காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் எவ் கென்னடியின் சகோதரரான திரு. ரொபேர்ட் கென்னடி முடிவு செய்துள்ளாரெனத் தெரிகிறது.

திரு. ரொபேர்ட் கென்னடி, ஜோன்சன் நிர்வாகத்தின் வியட்னாம் போர்க் கொள்கையை வன்மையாகக் கண்டித்துவரு[illegible] ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கம்போடியத் துறைமுகங்கள் தென்னாபிரிக்காவுக்குத் தடை

நாம்பென், மார்ச் 16

கம்போடியா, தனது துறைமுகங்கள் அனைத்தையும் தென்னாபிரிக்கக் கப்பல்களுக்கு மூடிவிட்டது.

அத்துடன், தென்னாபிரிக்கக் கம்பனி விமானங்களுக்குக் கம்போடிய விமான நிலையங்களில் வந்திறங்கும் வசதிகள் மறுக்கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஐ. நா. பந்தோபஸ்து சபை தீர்மானித்த தடைகளின் பிரகாரமே, கம்போடிய அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

# செக். உள்துறை மந்திரி பதவிநீக்கம் செய்யப்பட்டார்

## தலைவர் நொவொட்னிக்கும் எதிர்ப்பு வளர்கிறது

பிராக், மார்ச் 16

செக்கோஸ்லாவாக்கிய உள்துறை மந்திரி திரு. குத்துராவும், அட்டோர்னி ஜெனரல் திரு. பா. புஷ்காவும் அவர்களது பதவிகளினின்றும் நீக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் இருவருக்கும் எதிராகச் செக்கோஸ்லாவாக்கிய பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்தே, அரசாங்கம் அவர்களைப் பதவி நீக்கம் செய்துள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த செக்கோஸ்லாவாக்கிய இராணுவ ஜெனரல் விஷயமாகவே, உள்துறை மந்திரியும் அட்டோர்னி ஜெனரலும், பார்லிமெண்ட் எதிர்ப்புக்கு உள்ளாகியதாகத் தெரிய வருகிறது.

இது இப்படியிருக்க, செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதி திரு. அண்டோனி நொவொட்னியின் தலைமைக்கு நாட்டில் எதிர்ப்பு வளர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

நாட்டின் தலைமை சம்பந்தமான பிரச்னையை விவாதிக்கவென, செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, இன்னும் இரண்டு வாரங்களில் கூடவிருக்கிறது.

## கீன்யாவில் இந்திய மந்திரி

நைரோபி, மார்ச் 16

கீன்யாவுக்கு விஜயஞ்செய்துள்ள இந்திய ராஜிய வெளியுறவு மந்திரி திரு. பகத், நைரோபியில் கீன்ய வெளியுறவு மந்திரியைச் சந்தித்துப் பேசினார்.

நைரோபியிலுள்ள இந்தியத் தூதுவர் அவருக்கு அளித்த வரவேற்புபசாரமொன்றில், கீன்யா அரசியல் தலைவர்களும், பார்லிமெண்ட் அங்கத்தவர்களும் சமூகமளித்திருந்தனர்.

## நீவின்னுக்கு இரவு விருந்து

### இந்திய ராஷ்டிரபதி அளித்தார்

புதுடில்லி, மார்ச் 16

இந்தியாவுக்கு விஜயஞ் செய்துள்ள பர்மியத் தலைவர் ஜெனரல் நீவின்னுக்கும் அவரது பாரியாருக்கும் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயின் நேற்று இரவு விருந்தளித்து கௌரவித்தார்.

இந்த விருந்துக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் சமூகமளித்திருந்தார்.

ஜெனரல் நீவின், தமது விஜயத்தின் போது பல இடங்களைத் தரிசிப்பதுடன் இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளும் நடத்துவார்.

## கல்கத்தாவில் கலவரம்

### 3 பேர் மரணம்

கல்கத்தா, மார்ச் 16

நேற்று முன்தினம் கல்கத்தாவின் சில பகுதிகளில் நடைபெற்ற கலவரங்களில் 3 பேர் உயிரிழந்ததாகவும், 9 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 7 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கல்கத்தாவின் வடபகுதிகளிலேயே இக்கலவரங்கள் நடந்தன.

சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென கல்கத்தா பொலிஸ் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

700

## வியட்கொங்கியர் கொலைப்பட்டனர்

சைகோன், மார்ச் 16

தென் வியட்னாமில் வியட்கொங்கியருக்கெதிரான பெரிய தேடுதல் நடவடிக்கையொன்றில், இதுவரை 700 வியட்கொங்கியரைக் கொன்றுள்ளதாக இங்குள்ள அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதன் உடலிச்சையைப்பற்றிச் சிந்திப்பதினால் அவற்றில் பற்றுதல் உண்டாகிறது. பற்றுதலில் இருந்து ஆசை பிறக்கின்றது. ஆசை குரோதமாக கொழுந்து விட்டெரிகின்றது. குரோதத்தினால் சிந்தை மயக்கம், நினைவுதவறல் ஏற்படுகின்றன. நினைவு தவறலால் மனிதனின் புத்தி நாசமடைகின்றது புத்திநாசத்தினால் மனிதன் அழிகின்றான். உடலிச்சையை வெறுத்து, இறைவனையே சிந்தித்தால் மனம் தெளிவடைகின்றது.

— மகாத்மா காந்தி


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 4ம் திகதி [17-3-68]


## ஜனநாயக அமைப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா, மார்க்ஸிஸ-லெனினிஸ இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரப்போவதாக அறிவித்திருக்கிறார். திரு. சண்முகதாசனின் தலைமையிலுள்ள இந்தக் கட்சி திரு. எஸ். டி. பண்டாரநாயகாவை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமென்று நிச்சயமாக நம்பலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவராக இருந்தபோதே அவர் [சீன சார்பு] கம்யூனிஸ்ட் கட்சியுடன் அதிக தொடர்பு கொண்டிருந்தார். ஜனப் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்துக்கே அவர் 'மாவோ பட்டி' அணிந்து சென்றிருக்கிறார். ஓர் அரசியல் கட்சியில் அங்கம் வகிப்பதும், அதிலிருந்து விலகி வேறொரு கட்சியை ஸ்தாபிப்பது அல்லது பிறிதொரு கட்சியில் சேருவது இலங்கையில் மட்டுமல்ல, இதர சில ஜனநாயக நாடுகளிலும் சர்வசாதாரணமான விஷயம். திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் கூட்டரசாங்கம் வீழ்ச்சி அடைந்ததற்கே சில அங்கத்தவர்கள் கட்சி மாறியதுதான் காரணமென்பது தெரிந்த விஷயம். எனவே திரு. எஸ். டி. பண்டாரநாயகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதோ அவர் புதிய கட்சியில் சேர்வதோ புதிய விஷயமல்ல! ஆச்சரியமானதுமல்ல. எந்தக் கட்சியின் கொள்கை தமக்குச் சரியெனப்படுகின்றதோ அந்தக் கட்சியில் சேர்ந்து அதற்காக உழைப்பது அவரது சொந்த விஷயம்; அவருக்குள்ள உரிமையும் கூட.

ஆனால் சுதந்திரக் கட்சியிலிருந்து தாம் விலக்கப்பட்டதுபற்றியும், கம்யூனிஸ்ட் கட்சியில் தாம் சேர்ந்துகொள்ளத் தீர்மானித்ததற்கான காரணங்கள் பற்றியும் திரு. எஸ். டி. பண்டாரநாயகா தாம் விடுத்துள்ள ஒரு நீண்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள விஷயங்கள் சில நமது அரசியல் தலைவர்களினதும் பொது மக்களினதும் சிந்தனையைத் தூண்டுவதற்கு உதவக்கூடியன.

பார்லிமென்டரி ஜனநாயக முறை, புளித்துப்போன பத்தாம்பசலி முறையென்றும் இது முதலாளித்துவ ஏகேச்சாதிகாரர்களால் இங்கு புகுத்தப்பட்டதென்றும் இலங்கை சுதந்திரமடைந்து இருபது ஆண்டுகளாகியும் விவசாயிகளும், தொழிலாளிகளும் எதுவித நன்மையும் அடையவில்லையென்றும் திரு. பண்டாரநாயகா கூறுகிறார். புரட்சி ஒன்றே தான் உண்மையான சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க முடியுமென்றும் அவர் சொல்கிறார். அது அவரது கருத்து. புரட்சிக் கொள்கையை அவர் ஏற்றுக்கொண்டுள்ளதால் தான் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர முன்வந்துள்ளார். ஒரு பண்டாரநாயகா அல்லது ஒரு சேனநாயகா தான் ஆட்சி பீடத்தில் அமரமுடிந்துள்ளதென்றும், ஆட்சி அதிகார பீடத்தைக் கைப்பற்றுவதற்காக இவர்கள் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றனர் என்றும் இதற்கு 1965ம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் சமஷ்டிக்கட்சிக்குச் சலுகைகள் கொடுத்து ஆட்சிபீடத்தில் அமர ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முனைந்ததையும், 1957ம் ஆண்டில் 'பண்டா-செல்வா' ஒப்பந்தத்தை எதிர்த்து யு. என். பி. எடுத்த நடவடிக்கைகளையும் திரு. எஸ். டி. பண்டாரநாயகா உதாரணமாகக் குறிப்பிடுகிறார். அவரது கொள்கை எதுவாக இருப்பினும் ஆட்சி அதிகாரத்துக்காக நடைபெற்ற போட்டி பற்றி அவர் காட்டும் உதாரணங்களில் உண்மை இல்லையென்று கூறமுடியுமா?

உண்மையான சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்குப் புரட்சி ஒன்றேதான் மார்க்கம் என்பதில் அபிப்பிராய பேதம் இருக்கிறது. ஆனால் ஜனநாயக சோஷலிஸமே தங்கள் கொள்கையெனக் கூறிக்கொள்ளும் இரு பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் தங்கள் நோக்கத்தில் இதுவரை எந்த அளவுக்கு வெற்றிபெற்றுள்ளன? ஜனநாயக சோஷலிஸ அமைப்பை ஏற்றுள்ளபோதிலும் அதை நிறைவேற்றமுடியாதிருப்பது ஏன்?

ஆட்சி அதிகாரப் போட்டியைக் கைவிட்டு நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலனை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு அரசியல் கட்சிகளும், அரசியல் தலைவர்களும் உழைக்காதவரை அவர்களது நோக்கம் நிறைவேறாது என்பதுடன், ஜனநாயக வாழ்க்கைமுறைக்கே ஆபத்து நேரலாம். இதனை அரசியல் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

## தாகூரின் நூல் மொழி பெயர்ப்பு

கொழும்பு, சனி

ரவீந்திர நாத் தாகூரின் 'நாகதூபி' எனும் நூலின் சிங்கள மொழி பெயர்ப்பு கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. ஈரிய கொலேக்கு இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் நூல் நிலைய பொறுப்பாளரும் இந் நூலை மொழி பெயர்த்தவருமான திரு. தர்மதாசா குணவர்த்தனாவினால் விரைவில் கையளிக்கப்படவிருக்கின்றது.

ஆசிரியருக்கு கடிதம்

## வாய்ப்பூட்டா; தடுப்புக் காவலா?

பழைய காலத்தில் மகாராசாக்கள்சமஸ்தான வித்துவான்களை வைத்திருந்து சைவத்தை நிலைநாட்டுவதற்கு வேண்டிய அரிய தொண்டுகளைச் செய்துவந்தார்கள். நிநாளில் மிஷனரிமார்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்குச்சொந்தமான நிதிவைத்திருந்துபிரசாரகர்கள்மூலம் சேவை செய்து வருகின்றார்கள். இங்ஙனம் சேவை செய்பவர்கள் யாருமில்லாமை சைவத்திற்குச் சமீபகாலமாக இருந்து வந்த பெரியகுறை. இக்குறையை நீக்குவதற்குத் தெய்வச்செயலாக இந்து சமய அபிவிருத்தி ஆலோசனைச்சபைஎன்று ஒரு ஸ்தாபனம் செயல்படத்தொடங்கியது. இது சைவத்தவர்கள் எல்லோருக்கும் ஒரு பெரு மகிழ்ச்சியே.

இக்குழுவினர் பல வகையில் சேவைசெய்துவருவது பாராட்டத்தக்கது.

தற்போது இந்தியாவில் பெரிய ஆதீனங்களில் பணிபுரியும் ஓதுவார்மூர்த்திகளை வரவழைத்திருக்கிறார்கள். அவர்களுடையஇனியதேவாரப் பண்முறைகளை எங்கள் சிறுவர்களும் இசைவல்லுநர்களும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் சினிமா மயம்; சினிமாப்பாட்டுக்களே. இசைஞானம் இல்லாதவர்களும் நெஞ்சுருகும் வண்ணம் தேவாரத்திருமுறைகளைப் பாடவல்ல ஓதுவாரிமூர்த்திகளின் எண்ணிக்கை அருகிவரத்தக்க வகையில் காலம் மாறி வருகின்றது. இதை நிவிர்த்திசெய்வதற்கு நமது இந்து சமய அபிவிருத்தி ஆலோசனைச்சபை ஆவன செய்ய வேண்டும். திருக்கோயில்கள்முதலிய புனித இடங்களில் ஓதுவாமூர்த்திகளை அழைத்துச் சென்று தேவாரப் பண்ணிசையை நெஞ்சம் நெக்குருக ஓதுவிப்பித்தல் வேண்டும் இவ்வாறு அவரது சேவையை நாடெங்கும் பயன் படுத்தினால் மேற்படி சபையின் நோக்கமும் மக்களின் அறிவும்சமயபக்தியும்வளர்ச்சியடையும்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்குவந்துள்ளஓதுவாமூர்த்திகளை ஓர் பழமையான ஆலயத்திற்குச் சுவாமி தரிசனம் செய்வதற்கு அழைத்தபோது, அவர்கள் சில சட்டதிட்டங்களுக்குத் தாம் கட்டுப்பட்டு இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

'நாம் ஆர்க்கும் குடியல்லோம்' என ஓதும் ஓதுவாமூர்த்திகளை சுவாமி தரிசனம் செய்வது முதலிய அதிசிறந்த கருமங்களுக்கும் கட்டுப்படுத்தியிருப்பது உண்மையாயின் அது ஈழத்துச் சைவசமயிகளுக்கு ஒரு பெரிய இழுக்கு என்றும் இவ்வித முறையற்ற கட்டுப்பாட்டுக்கு அடங்கி இருக்கும் ஓதுவாமூர்த்திகள் நமது சைவ சமய குரவரை நிந்தை செய்கின்றார்கள் என்றும் கருத வேண்டியிருக்கின்றது.

சமயஞானம், சமயபக்தி தேவார இசை ஞானம் ஆகியனவற்றை வளர்த்தலையே நோக்கமாகக் கொண்டுள் ஓதுவாமூர்த்திகளை இந்தியாவிலிருந்தும் அரிதில் அழைத்து வந்து இங்குள்ள ஆலயங்கள் முதலிய சைவத் தலங்களுக்கு தரிசனத்தின் பொருட்டாயினும் அவரைச் செல்ல விடாது தடுத்து, பொருளின் நிமித்தமாக மாத்திரம் அவரைப் பயன்படுத்துவது சைவத்திற்குச் செய்யும் தொண்டாகுமா? இது தருமா? தருமந்தானா?

மு. சிவப்பிரகாசம்,
சுழிபுரம்.

## இன்றைய பலன்

[17-3-68]

ஞாயிற்றுக்கிழமை

(பங்குனி மீ 4 உ)

திதி- திருதியை இரவு 7-08 மேல் சதுர்த்தி

நட்சத்திரம்- சித்திரை பகல் 1-56 மேல் சுவாதி

ராகுகாலம்- 4-50—6-20

சுபநேரம்- 9-20 — 10-50

இன்று பிறந்தவர்களுக்கு எதிலும் ஒரு தளர்ச்சி காணப்படும். எதுவித காரணமுமின்றிப் பதட்டமடைவர். சந்தேகத்துக்கு இடம் கொடாதிருத்தல் நன்று. வருவாயில் மந்தநிலையே காணப்படுகிறது. முன் கோபம் முன்னேற்றத்தில் பல முட்டுக்கட்டைகளைப் போடலாம். பொறுமையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் இருப்பின் சில பொன்னான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு. வேண்டுவது மனத்திடமே.

மேஷம்- வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம்.

ரிஷபம்- கோபுர நினைப்பு, குடிசைவாழ்வு

மிதுனம்- பரோபகாரச் சிந்தை, பரம்பொருள் நினைப்பு.

கடகம்- புகழ்ஏணியில் துரிதமுன்னேற்றம்.

சிம்மம்- வரவில்திருப்தி வாழ்க்கைநலன்.

கன்னி- குழப்பமான சூழ்நிலை உற்சாகம் குன்றும்

துலாம்- ஆசைஅலைகள் அவசரமுடிவு.

விருச்சிகம்- மனைவாழ்வில் மலர்ச்சி, மனதில் ஆனந்தம்.

தனுசு- சிந்தையில் உந்தியது செயலிலே தடைப்படும்.

மகரம்- நல்ல தீர்ப்பு, நல்வாழ்த்துமுண்டு.

கும்பம்- உள்ளமும் இல்லும், உதவியும் கிடைக்கும்.

மீனம்- வேவுக்கணை தொடுப்பர் விழிப்புடன் இரு.

— சோதிட க...... —

## உணவுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன

அனுராதபுரம், சனி

அனுராதபுரத்திலுள்ள சில உத்தரவுபெற்ற வர்த்தகர்களது கடைகளில் பதுக்கி வைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட மல்லி, மாலுணவு, பருப்புமூடை போன்றவைகள் உணவுக்கட்டுப்பாட்டதிகாரியால் கைப்பற்றப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

(5ம் கலத் தொடர்ச்சி)

அரசியல்கட்சியாக்கியிருக்கிறாரா?

தேர்தல்காலம் நெருங்க நெருங்க இன்னும் பல வேடிக்கைகளைக் காணலாம் என்று நினைக்கிறேன்.

— ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

1957-ம் ஆண்டுக்குப் பின்னர் என்ற ஞாபகம். 'பண்டா—செல்வா' ஒப்பந்தம்கைச்சாதிடப்பட்டது, பற்றி சில ஆங்கிலப் பத்திரிகைகளும் பல சிங்களப் பத்திரிகைகளும் தாங்கள் நினைத்தபடியெல்லாம் செய்திகளைத் திரித்தும் உருவாக்கியும் தங்கள் மனம்போன போக்கில் கருத்து வெளியிட்டும் வந்தன. அதாவது வகுப்புவாதம் என்னும் விஷம் தெளிக்கப்பட்டுவந்த நேரம்.

''சிங்களப் பத்திரிகைகளும் நுங்கிலப்பத்திரிகைகளும் இப்படி எழுத்தித் தொலைக்கின்றனவே இதுவா பத்திரிகைச் சுதந்திரம். ஐயோ இந்தபத்திரிகைகளேஇப்படி எழுதுகையில் தமிழ்ப் பத்திரிகைகள் என்ன எழுதுகின்றனவோ? தெய்வத்துக்குத்தான் தெரியும்'' என்று அன்றைய பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா கவலையுடன் வாய்விட்டுக் கூறினார். இதன்பின்னர் தான் அவர் பத்திரிகையாளர் சங்க இரவு விருந்து வைபவத்தில் ''பத்திரிகை ஏகபோகம்'' பற்றிய பிரசித்திபெற்ற உரை நிகழ்த்தினார்.

ஃ ஃ ஃ

சமீபத்தில் வெளியான 'சிங்களே' என்ற பத்திரிகை அதன் முதல்பக்கத்தில் கொட்டை எழுத்தில் தலைப்புச் செய்தியொன்றை வெளியிட்டிருக்கிறது.

''பிரதமர் டட்லி சேனநாயக்கா தேசிய ஒற்றுமை பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் சமஷ்டிக்கட்சியினர் இலங்கைக்குவகுப்புவாதத் தலைவர்களை, சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக தமிழ்மக்களைத் தூண்டிவிடுவதற்கா இலங்கைக்கு வரவழைக்கின்றனர்.''

சென்னையைச் சேர்ந்த கவிஞரும்வகுப்புவாதத்லைவருமான கண்ணதாசன் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளார்.

கண்ணதாசன்முன்பு திராவிடமுன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தார். தற்பொழுது அவர் காங்கிரஸ் தலைவராக இருக்கிறார். 'தமிழரின் ஐக்கியம்' பற்றி இவர் இங்கு உரையாற்றியிருக்கிறார்.

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. எஸ். இராசதுரையின் அழைப்பின் பேரிலேயே கண்ணதாசன் இங்கு விஜயம் செய்தார். கல்முனையில் உபதேர்தல் நடந்த சமயம் அவர் அங்கு இருந்தார் எனக் கூறப்படுகிறது கண்ணதாசன் முஸ்லிம்மக்களின் பரம விரோதியாவார்.

இப்படிக் கூறுகிறது அந்தப் பத்திரிகை.

'மாவட்டசபை மசோதா' பற்றி அவைகள் சும்மா இருக்கவில்லை. அப்படி எதிர்பார்க்கவும் முடியுமா?

ஃ ஃ

எஸ். டி. பண்டாரநாயகாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிவெளியேற்றிவிட்டது. அவர் திரு. சண்முகதாசனைத் தலைவராகக்கொண்ட 'கம்யூனிஸ்ட்கட்சி'யில் சேரப்போகிறார். இதே சமயம் திரு. ஆர். ஜி சேனநாயகாவிடமும் சுதந்திரக் கட்சி விளக்கம் கேட்டிருக்கிறது. ஆர். ஜி யும் வெளியேற்றப்படுவாரா?

முதியான்சே தென்னக்கூன், சோமவீர சந்திரசிறி ஆகியோரின் நிலை என்னாகும்?

இதனால்தான் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியை அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தது கல்விக்கு பேரிடி"

## சேமநல சபைகள் மூலம் சமுதாயத்துடன் தொடர்பு

## யாழ்ப்பாணக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் சபாநாயகர் கொரியா

வட்டுக்கோட்டை, சனி

**"மதஸ்தாபனப் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தது கல்வித்துறைக்கு நேர்ந்த பேரிடி. கஷ்டப்படும் பாடசாலைகள் கல்வி கற்கும் மாணவர்களிடம் கட்டணம் அறவிட அனுமதியளிக்கலாமா என்பதே இன்றைய பிரச்னையாக இருக்கிறது. இது அரசாங்கம் தீர்மானிக்கவேண்டிய நிதி, கொள்கை சம்பந்தமான விஷயங்கள்.** இதில் எனது சொந்தக் கருத்து எதையும் தெரிவிக்க நான் விரும்பவில்லை. ஆனாலும் சமுதாயத்துக்கும் பாடசாலைகளுக்குமிடையே ஷேமலாப சபைகள் மூலம் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டியது அவசியம் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்."

இவ்வாறு ஜனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகரும் சிலாபம் எம்.பி யுமான திரு. ஷேர்லி கொரியா இன்று மாலை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இவ்விழாவில் திரு. ஷேர்லி கொரியா மேலும் குறிப்பிட்டதாவது:-

இலங்கையின் வட பகுதிக்கும் தென் தொகுதிக்கும் இடையில் கூடுதலான ஒத்துழைப்பு இருக்கவேண்டுமென்ற காரணத்திற்காக நான் இந்த வைபவத்தில் பங்கு கொள்ள பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். காலஞ்சென்ற எனது தந்தையார் திரு. சி. ஈ. கொரியா தேசிய ஒற்றுமைக்கு அரும்பாடுபட்டார். இலங்கையில் வாழும் நாம் எல்லோரும் சாதி, சமய வித்தியாசங்களின்றி இலங்கையராக வாழவேண்டுமென்பது எனது இலட்சியம்.

### புதிய திட்டங்கள்

சாதி துவேஷத்தை வளர்த்து இந்தியாவின் பாரம்பரியமான பொருளாதாரத்தையும், கல்வி முறையையும் கெடுத்துவிட்டார்கள் என்று பண்டித நேரு பிரிட்டிஷாரைப் பற்றிக் கூறினார். இங்கும் அதே நிலை தான். கல்வி மந்திரி புதிய பல திட்டங்களை புகுத்தியுள்ளார். அவற்றை சிலர் கண்டிக்கின்றனர். சிலர் மெச்சுகின்றனர். இதுபற்றி நான் ஒன்றும் கூற விரும்பவில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து கல்வி முறையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கவிருக்கும் கல்வி மந்திரியின் முயற்சிக்கு உதவி செய்வோமாக. வளர்ந்து வரும் ஒரு நாட்டின் தேவைக்கேற்ப நாம் அரசியல் வேற்றுமைகளை அகற்றிவிட்டு கல்வியை வளர்க்கவேண்டும்.

நமது கல்வி முறையில் பலவிதமான மாற்றங்களை புகுத்த முயலுகிறார், கல்வி மந்திரி. நமது பொருளாதாரத்துக்கேற்ப விவசாயம், என்ஜினியரிங், விஞ்ஞானம், கலை முதலிய துறைகளில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படவேண்டும்.

### கல்வியின் குறிக்கோள்

கல்வித்தராதரம்குறைந்துவிட்டதென்றும் வாலிபர்கள் கெட்டுப்போகிறார்களென்றும் கதை உலாவுகிறது. இந்தநிலைமாறி நாங்கள் ஒரு சிரிய தராதரத்தை ஏற்படுத்தவேண்டும். வாலிபர்களை நல்ல வழியில் செலுத்தவேண்டும். கல்வியின் மூலம் உலகப் பிரச்னைகளை ஆராய்ந்து அவற்றிற்கேற்ற முறையில் நடந்துகொள்ள அவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டும். ஒற்றுமையும் முன்னேற்றமுமே கல்வியின் குறிக்கோளாயிருக்கவேண்டும். மனிதரிடையே வேற்றுமைகள் இருந்தபோதிலும் அவற்றை சமன் படுத்துவது கல்வியின் நோக்கம். பிற்காலத் தலைவர்களாகிய இளைஞர்களுக்கு நாம் நல்ல வழிகாட்ட வேண்டும். இளைஞர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து இந்நாட்டுக்கு உபயோகமானவர்களாக இருக்கவேண்டும் என்பதை, கல்வி அவர்களுக்குப்புகட்ட வேண்டும்.

### ஷேமலாப சபைகள்

உதவிபெறும் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுத்தது ஒரு பெரிய இடி. கஷ்டப்படும் பள்ளிக்கூடங்கள் சம்பளம் எடுக்கவிடலாமா என்பதே இப்போதைய பிரச்னை. நிதி சம்பந்தமான இப்பிரச்னைகளை அரசாங்கம் தீர்மானிக்கவேண்டும். எனது சொந்தக்கருத்துக்களை நான் தெரிவிக்கவிரும்பவில்லை. ஆனால் சம்பளம் எடுக்காத தனிப்பட்ட பாடசாலைகளுக்கு புதிய கல்வி மசோதா ஓரளவு ஆறுதல் அளிக்கிறதென்று கூறலாம். சிலர் சம்பளம் எடுக்கும் பாடசாலைகளே வேண்டுமென்கிறார்கள். ஆனால் சமுதாயத்துக்கும் பாடசாலைகளுக்குமிடையே ஷேமலாப சபைகள் மூலமாக நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டியது அவசியம் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நீங்கள் 1823-ம் ஆண்டு தொடக்கம் நல்ல கல்வித்தொண்டு புரிந்து வருகிறீர்கள். அரசாங்க ஆதிக்கம் வந்தபின் நீங்கள் பலவித கஷ்டங்களை அனுபவிக்கிறீர்கள். என்றாலும் காலம்போக பல நிவாரணங்கள் ஏற்படுமென்று நான் நம்புகிறேன்.

உங்கள் கல்லூரி நாட்டுக்குப் பயன்படும் பல மாணவர்களைத் தந்திருக்கிறது. அவர்கள் தேசிய அபிவிருத்திக்குத் தொண்டு புரிந்திருக்கிறார்கள்.

உங்கள் தொண்டு பழைய காலத்தில் மிகப்பெரியதாயினும் வருங்காலத்தில் இன்னும் பெரிதாக விளங்கும். ஒரு புதிய யுகம் தோன்றுகிறது. யாழ்ப்பாணக் கல்லூரி மென்மேலும் அரிய புதல்வர்களைப் பெற்றெடுக்கட்டும். தாய் நாட்டுக்கு அரிய தொண்டாற்றும் மாணவர்கள் இங்கு உதயமாகட்டும்.

இலங்கைத் தீவை சமாதானமும் நல்லெண்ணமும் நிறைந்த ஒரு சாந்த பூமியாக்க நாம் எல்லோரும் முயலுவோமாக.

---

## விக்டோரியா கல்லூரிக்கு முதலிடம்

சுழிபுரம், சனி

அகில இலங்கை சாரணர் கடேட் போட்டியில் யாழ்ப்பாணப் பிரிவில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முதலிடத்தைப்பெற்றுக்கொண்டது. இப்போட்டி கடந்த வாரம் நியத்தளாவையில் நடைபெற்றது.

---

கராச்சியில்

## மாணவர் ஆர்ப்பாட்டம்

கராச்சி, மார்ச் 16

ஐந்து ஆபிரிக்கர்களை ரொடீஷிய அரசாங்கம் தூக்கிலிட்டதைத் எதிர்த்து கராச்சியில் நேற்று பாகிஸ்தானிய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

---

# கட்டணம் வசூலிக்கும் சலுகை கிடைக்குமா?

## கல்லூரிஅதிபர் நம்பிக்கை

வட்டுக்கோட்டை, சனி

**"தேசியஅரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில், தனியார் பாடசாலைகள் கட்டணம் வசூலிக்கும் சலுகையைப் பெறுமென எதிர்பார்க்கிறோம்" என்று யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. எஸ். பாலசிங்கம் இன்று மாலை நடைபெற்ற கல்லூரி பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்,**

அதிபர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

கௌரவ திரு. ஷேர்லி கொரியா, திருமதி அபயசேகரா பெற்றோர்கள் ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்.

நீங்கள் எல்லோரும் இந்தவருடாந்தப்பரிசளிப்பு விழாவில் பங்கு பற்றி கௌரவித்தமைக்கு நாம் மிகவும் நன்றியுடையவர்களாயிருக்கிறோம்.

சபாநாயகர் அவர்களே! இன்றிரவு இந்த வைபவத்தில் தாங்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள உடன்பட்டதற்கு நாங்கள் எமது அன்புகூர்ந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாடாளுமன்ற திட்டம் இந்நாட்டில் உதயமானதின் பின் முதன் முதலாக ஒரு நாடாளுமன்ற சபாநாயகர் இவ்வைபவத்தில் கலந்துகொள்வது இதுவே முதன் முறையாகும். ஆகையால் தங்கள் விஜயம் சரித்திரப் பிரசித்திபெற்றதாகும். தங்கள் உயர்பதவியின் மூலம் தாங்கள் இத்தீவில் ஜனநாயகத்தைக் காத்துப் பேணி வருகிறீர்கள். வெஸ்லி, சென்ட் தொமஸ், றோயல் முதலிய பிரபல கல்லூரிகளில் தாங்கள் பயின்ற கல்வியும், தங்கள் சட்டக் கல்விப் படிப்பும், நாடாளுமன்றத்தில் தாங்கள் பெற்ற அனுபவமும் சபாநாயகராகத்தாங்கள் ஆற்றும் கடமைக்கு நீதிமுறை தவறாமல் நெறியொழுக்கத்துடன் நடக்கும் திறமையைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

பெயர்பெற்ற ஒரு சபாநாயகர் குடும்பத்தின் வழித்தோன்றலாக வந்ததாங்கள் இரு முறைமந்திரிப் பதவியும் வகித்து எமது நாட்டின் வியாபாரத் தொடர்புகளை அபிவிருத்தி செய்துள்ளீர்கள்.

இவையெல்லாவற்றையும் விட சிறந்தது தாங்கள் இலங்கை சட்டசபையில் மூலகாரராக இருந்து உலக ஐக்கியத்துக்கு செய்த தொண்

(8-ம் பக்கம் பார்க்க)

---

# தனியார் கடைகளை கியூபா அரசாங்கம் பொறுப்பேற்றது

ஹவானா, மார்ச் 16

கியூபாவின் தலைநகரான ஹவானாவிலுள்ளஎல்லாத் தனியார் கடைகளையும் கியூபா அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

கியூபாவிலுள்ள கடைச் சொந்தக்காரர்களைக் கடந்தவியாழனன்று கியூபாப் பிரதமர் திரு. பிடெல் காஸ்ட்ரோ, [illegible] வாய்ந்த ஒட்டுண்ணிகள்' எனக் குற்றஞ்சாட்டியதைத்தொடர்ந்தே ஹவானாவிலுள்ள தனியார் கடைகளை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

தனியார் துறைக்குத் தான்எதிர்ப்பானவரெனக் கூறியுள்ள பிரதமர் காஸ்ட்ரோ, தமது அரசாங்கம் தனியார் கடைகளைப் பொறுப்பேற்றுள்ள நடவடிக்கை ஓரளவு அதிருப்திக்கும் இடமளிக்கலாம் என்பதை ஒப்புக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி கி. ச. தேர்தலில் 28 பேர் போட்டி

## 4 பேர் போட்டியின்றித் தெரிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு வரணிகிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் கடந்த 11-ந் திகதி கிராமசபைமண்டபத்தில் தாக்கல் செய்யப்பட்டன. கச்சேரி உதவியாளர் திரு. ரி. கந்தசாமி முன்னிலையில் 15 வட்டாரங்களுக்குமான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது 4 வட்டாரங்களுக்கு அபேட்சகர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இரண்டாம் வட்டாரத்திற்கு திரு வி சேனாதிராசாவும், நான்காம் வட்டாரத்திற்கு திரு கே வீரகத்தியும், ஏழாம் வட்டாரத்திற்கு திரு கே முருகேசுவும், எட்டாம் வட்டாரத்திற்கு திரு எஸ் கந்தையாவும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய வட்டாரங்களில் போட்டியிடுபவர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:—

1-ம் வட்டாரம் திரு ஏ நடரா, திரு கே சின்னத்தம்பி, திரு பி தங்கவேலு, திரு கே சோமுங்கன். 3-ம் வட்டாரம்: திரு கே முருகுப்பிள்ளை, திரு வி சின்னத்தம்பி. 5-ம் வட்டாரம்: திரு எஸ் கந்தசாமி, திரு எஸ் குமாரசாமி. 6-ம் வட்டாரம்: திரு கே ஆறுமுகம், திரு கே வேலுப்பிள்ளை. 9-ம் வட்டாரம்: திரு எஸ் சின்னத்தம்பி, திரு எஸ் தம்பிப்பிள்ளை. 10-ம் வட்டாரம்: திரு கே இராசலிங்கம், திரு வி கந்தசாமி, திரு வி தங்கராசா. 11-ம் வட்டாரம் திரு எஸ் நாகலிங்கம், திரு ஏ மாப்பாணபிள்ளை, திரு எஸ் இராசையா. 12ம் வட்டாரம்: திரு எஸ் குலசேகரம், திரு எஸ் கணபதிப்பிள்ளை. 13-ம் வட்டாரம் திரு எஸ் சுப்பிரமணியம், திரு எஸ் விஸ்வலிங்கம், திரு என் சிவசுப்பிரமணியம். 14-ம் வட்டாரம்: திரு ரி தம்பையா, திரு கே சின்னத்துரை, திரு எஸ் வல்லிபுரம். 15-ம் வட்டாரம்: திரு கே செல்லன், திரு வி சின்னத்தம்பி. (கா. நி.)

# மேற்குயாழ்ப்பாண ஆசிரியர் சங்கப்பேச்சுப்போட்டி விபரம்

சங்கானை, ஞாயிறு

மேற்கு யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் நடாத்திய பேச்சுப்போட்டி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இதில் பல பாடசாலைகளும் கல்லூரிகளும் கலந்து கொண்டன. போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம்:-

தமிழ் பேச்சு: ஆண்கள் கீழ்ப்பிரிவு- ஐ கேவானந்தன் (வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை) வி. சிறீதரன் (அரசினர் விக்ரோறியாக் கல்லூரி), ம. ஸ்ரீஸ்கந்தலிங்கம் [வட்டு இந்துக் கல்லூரி) ஆண்கள் மத்தியபிரிவு; க. ஸ்ரீபாலகுமாரி (திருஞானசம்பந்தவித்தியாசாலை) ஆர் ஈஸ்வரநேசன் [விக்ரோறியாகல்லூரி சுழிபுரம்] ஆ. பத்மநாதன் (இந்துக்கல்லூரி வட்டுக்கோட்டை) ஆண்கள் மேற்பிரிவு; பி.சோதீஸ்வரன் (இந்துக்கல்லூரி காரைநகர்), ரி- சந்திரியார் [மெய்கண்டான் வித்தியாசாலை பண்ணாகம்] எ. விவேகானந்தன் [விக்ரோறியா சுழிபுரம்]. ஆண்கள் அதிமேற்பிரிவு: எஸ். சண்முகராசா [விக்ரோறியா கல்லூரி சுழிபுரம்], எம். குலசிங்கம் இந்துக்கல்லூரி வட்டுக்கோட்டை): எஸ். தங்கராசா (விக்ரோறியா சுழிபுரம்).

பெண்கள்: கீழ்பிரிவு பேச்சுப்போட்டி: எஸ். தங்கரத்தினம் [திருஞானசம்பந்த வித்தியாசாலை வட்டு) என் நிர்மலநாயகி (இந்துக்கல்லூரி வட்டு], என். நாகேஸ்வரி ]மெய்கண்டான் பண்ணாகம்]. பெண்கள் மத்தியபிரிவு எஸ். சகுந்தலை [விக்ரோறியா சுழிபுரம்] வி.இராஜேஸ்வரி [மகா வித்தியாலயம் வேலணை), என். தேவிவிஜயலட்சுமி இந்துக்கல்லூரி வட்டுக்கோட்டை] பெண்கள் மேற்பிரிவு: எம். சகுந்தலாதேவி [மகளிர்கல்லூரி பண்டத்தரிப்பு). பி. நவமலர் [விக்ரோறியாகல்லூரி சுழிபுரம்[ கே மாலினிதேவி மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு) பெண்கள் அதிமேற்பிரிவு, ந. இராசேஸ்வரி [மகளிர் கல்லூரிபண்டத்தரிப்பு) அ. சந்திரவதனு விக்ரோறியா சுழிபுரம் த. திலகவதி (மகளிர்கல்லூரி பண்டத்தரப்பு]

ஆங்கிலப்பேச்சு ஆண்கள் கீழ்பிரிவு: வி. கிரிதரன் (விக்ரோறியா, சுழிபுரம்] ரி. கதிர்காமநாதன் [மகாவித்தியாலயம் வேலணை] பி. பிரபானந்தன் [இந்துக்கல்லூரி காரைநகர்]. மத்தியபிரிவு ஆண்கள்; எஸ். திருமைநாதன் [யாழ்ப்பாண கல்லூரி வட்டு) டபிள்யூ. ஆர். பாலசிங்கம்) யாழ்பாண கல்லூரி வட்டு) பி, இராஜகோபாலன் (விக்ரோறியா சுழிபுரம்]

மேற்பிரிவு:- ஆண்கள்: ஆங்கிலம்: மேகன் எஸ். திசநாயகம் -[யாழ்ப்பாணக் கல்லூரி வட்டு.] ரஞ்சித். எஸ். தம்பிராசா - [யாழ்ப்பாணக்கல்லூரி வட்டு ] ரி. ஞானசம்பந்தன் - இந்துக் கல்லூரி காரை நகர்]

அதிமேற்பிரிவு ஆண்கள்:- ரி. இராஜேந்திரன் விக்ரோறியா சுழிபுரம்.

ஆங்கிலம் கீழ்ப் பிரிவு:- பெண்கள்-ஆர்.சாந்தகுமாரி [மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு]. எஸ். சுலோசனு [மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு] எஸ். சியாமளாராணி [இந்துக் கல்லூரி காரைநகர்.)

மத்திய பிரிவு: பெண்கள் எம். மதிவதனு [மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு[ ஆர். சாந்தகுமாரி [யாழ்ப்பாணக் கல்லூரி வட்டு.] ஆர். ரகுராஜினி [மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு]

மேற்பிரிவு பெண்கள்: ஆங்கிலப் பேச்சு:- எஸ். சாந்திதேவி (மத்திய மகாவித்தியாலயம் வேலணை], கே. மாலினிதேவி (மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு) என். உஷ்சாதேவி இந்துக் கல்லூரி காரைநகர்]

இசைப்போட்டி தனிப்பாடல ஆண்கள்: கீழ்ப்பிரிவு:- கே. ஜெகநாராயணன் - இந்துக் கல்லூரி வட்டுக் கோட்டை] வி. கிரிதரன் - (விக்ரோறியா சுழிபுரம்) என். முத்துச்சாமி- (இந்துக் கல்லூரி காரைநகர்).

தனிப்பாடல் பெண்கள் கீழ்ப்பிரிவு:- எஸ். இரகுரஞ்சனி- [மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு), பி. பூமணி - (மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு], எஸ். கலைவாணி- (மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு)

இசைப்போட்டி தனிப் போட்டி பெண்கள் மேற்பிரிவு: எஸ் தேவரா[illegible] துக்கல்லூரி கா[illegible] எம். விஜயலட்சுமி (விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்) வி. வாசுதேவி (மகளிர் கல்லூரி பண்டத்தரப்பு) கூட்டுப்பாடல் பெண்கள் கீழ்பிரிவு: பண்டததரிப்பு மகளிர் கல்லூரி, அரசினர் விக்ரோறியா கல்லூரி சுழிபுரம் காரைநகர் இந்துக் கல்லூரி கூட்டுப்பாடல் பெண்கள் மேற்பிரிவு: பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக்கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி.

போட்டியில் முதல்மூன்று இடங்களையும் பெற்ற மாணவ மாணவிகளுக்கு யாழ்ப்பாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஏ. வைரமுத்து நற்சாட்சிப் பத்திரங்களையும் வெற்றிக் கேடயங்களைம வழங்கிப்பேசுகையில்;

வருடாவருடம் நடத்தப்படும் இப் போட்டியில் முன்னைவிட அதிகமான பாடசாலைகள் கலந்து பரிசில்களைப் பெற்றுள்ளன என்றும் இதற்கு கல்லூரிகளினதும் பாடசாலைகளினதும் இடைவிடாத முயற்சியே காரணமாகும் என்றார்.

இதற்கு உறுதுணையாயிருந்த ஆசிரியர்களுக்கும் மத்தியஸ்தம் வகித்த ஆசிரியர் [illegible] ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நன்றி கூறினார்.

அச்சுவேலியில்

# பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு அச்சுவேலியில் பொலிஸ் நிலையும் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை பொலிஸ் தலைமைக் காரியாலயம் வடபகுதி பொலிஸ்அதிபருக்கு வழங்கியுள்ளது.

கடந்த பல காலமாக இங்கு பொலிஸ் நிலயம் என்று அமைகவேண்டிய தன் அவசியத்தை பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டியிருந்தனர்- அண்மையில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்திலும் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

விரைவில் அமைக்கப்படவிருக்கும் இப்பொலிஸ் நிலயத்தில் ஒரு சார்ஜண்டும், 6 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கடமையாற்றுவார்கள் இதற்கான கட்டடத்தைக் காரியாதிகாரி பெற்றுக்கொடுத்ததும் பொலிஸ்நிலையம் அமைக்கப்படும் (நி-

# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

ஞாயிறு 17-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 இணக்குறிப்பு, 7-30 குரல் வளை, 8-00 நிலையஒலிப் பதிவுகள். 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வளை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாவளம், 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — எஸ். பரம்தில்லை ராசா.

யாழ் மாவட்டத்துக்கு

# வெள்ள நிவாரணமாக மேலும் ரூ. 3 லட்சம்

## அதிகாரிகள் கோருவர்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டத்துக்கு வெள்ள நிவாரண நிதியாக மேலும் மூன்று லட்சம் ரூபாய் வழங்குமாறு சமூக சேவை அமைச்சை இங்குள்ள அதிகாரிகள் விரைவில் கேட்கவிருப்பதாகத் தெரிகின்றது. இத்தகவலை யாழ்ப்பாணம் சமூக சேவை இலாகாவைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் நேற்றுத்தெரிவித்தார்.

ஏற்கனவேஇங்கு விநியோகிக்கவென வழங்கப்பட்ட 9 லட்சம் ரூபாவும் இங்கு வழங்கப்பட்டு விட்டதாகவும், இன்னும் சில கிராம சேவையாளர் பகுதிகளுக்கு நிவாரண நிதி வழங்கப்படாததாலுமே மேலும் சுமார் 3 லட்சம் ரூபா தருமாறு கோர இருப்பதாகவும் இவர் தெரிவித்தார்.

இங்கு விநியோகிக்கவென வழங்கப்பட்ட இப்பணத்தில் ஏற்கனவேயே சுமார் 1 லட்சம் ரூபா பெறுமதியான மாவு, சீனி, தேயிலை ஆகியன பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டதாகவும் மீதிப்பணமே பொதுமக்களுக்கு பணமாக வழங்கப்பட்டதாகவும்இந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (கா. நி.)

# நடராஜ தத்துவம்

சுழிபுரம், சனி

நடராசரின் தத்துவங்களை எமக்கு மிகவும் அழகாக சிவபுராணத்தில் எடுத்து விளக்கியுள்ளார். மாணிக்கவாசகசுவாமிகள் சிவபுராணத்தை பாராயணம்செய்வதுடன் அதன் கருத்துக்களை அறிந்து கற்று பொருள் தெரிவதன் மூலம் அளப்பரிய பேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம். நடராசர் ஒவ்வோர் செயல்கள் மூலம் ஒவ்வொரு தத்துவங்களை எமக்கு விளக்கிக்காட்டியுள்ளார். தில்லையில் நடனம் ஆடிய நடராசர் தோற்றம் இன்று எல்லோருடைய மனக்கண்முன் என்றும் அளியாக் காட்சியாகவுள்ளது'.

இவ்வாறு சுழிபுரம் விக்டோரியாக கல்லூரியில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராசமூர்த்தி மகா கும்பாபிஷேக வைபவத்தின் போது உரையாற்றிய காஞ்சி காமகோடிபீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்ரீமடம் சமயப்பிரசாரகர் ஸ்ரீலஸ்ரீ சிவஒளி ஞானந்த அடிகள் குறிப்பிட்டார்.

விழாவுக்கு திரு. கே கந்தையா தலைமைவகித்தார். ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரானின் கதாப் பிரசங்கமும், தேவார இன்னிசைச் செல்வர் பி. ஏ. எஸ். ராஜசேகரனின் தேவாரப்பண்ணிசையும் நடைபெற்றன.

# இளம்பிள்ளைவாத நோய்தடுப்பு

கொழும்பு, சனி

சுகாதார இலாகாவினர் இளம்பிள்ளைவாத தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கொழும்பில் பல இடங்களில் நேற்று மூன்றரை வயது முதல் 5 வயதுக்கிடையிலான குழந்தைகளுக்கு தடுப்புமருந்து விநியோகிக்கப்பட்டது. இன்னும் இரு வாரங்களில் நீர்கொழும்புக்கும் ஹோமகமவுக்குமிடையே இளம்பிள்ளை வாத தடுப்பு நடவடிக்கை விரிவாக மேற்கொள்ளப்படவிருக்கிறது. தெகிவளைக்கும் மொரட்டுவைக்குமிடையிலும் இவ்விது விரிவான நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

# நால்வர்கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு கொழும்புத்துறையில் நடைபெற்ற கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து நால்வரைப் பொலிசார் நேற்றுக் கைதுசெய்தனர்.

இச்சம்பவத்தில் கத்திக்குத்துக்கு இலக்கான மயில்வாகனம் என்பவர் சிகிச்சை பெற யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இது சம்பந்தமாகச் சந்தேகத்தில் பேரின்பலிங்கம், திருநாவுக்கரசு, ஆறுமுகம், கந்தையா ஆகிய நால்வரைக் கரையூர் பொலிசார் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்தனர். புலன்விசாரணை தொடர்ந்து நடாத்தப்படுகிறது.

# இருவருக்கு தலா ரூ. 500 அபராதம்

வல்வெட்டித்துறை, சனி வல்வெட்டித்துறைசுங்கப் பகுதியினரும், இராணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து ரோந்து சென்று கொண்டிருந்த சமயம் வல்வெட்டித்துறை கடற்கரையில் இருந்து கலண்டர் படம், பருத்திப் பஞ்சு கொண்ட மூன்று கட்டுப் பாசல் கைப்பற்றப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் யாவும் இந்தியாவிலிருந்துஇலங்கைக்குகொண்டு வரப்பட்டதாகச் சந்தேகிக்கப் படுகிறது.

இது சம்பந்தமாக ஒரு கட்டுமரம் கைப்பற்றப்பட்டுள்ளது. தில்லையம்பலம், வேலும்மயிலும் என்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் அரசாங்க அதிபரினால் விசாரணை செய்யப்பட்டு தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# "சாரண இயக்கத்தின் அத்திபாரம்"

மானிப்பாய், சனி

"சாரண இயக்கத்தின் அத்திபாரம் குருளைச் சாரணர் இயக்கத்திலேயே தங்கியிருக்கின்றது. ஆதலால் குருளைச்சாரணருக்குத்திறம்பட்ட பயிற்சியளிக்க வேண்டும்" என யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் திரு. ஜே ஜி.அரசரத்தினம் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற குருளைச் சாரணர் ஆசிரியர் ஆரம்ப பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். ஆண்களும், பெண்களும் ஏராளமாகக் கலந்து கொண்ட இப்பயிற்சியை யாழ்ப்பாண மாவட்ட குருளை ஆசிரியர் திரு. உ. ந. தேவகடாட்சம் பொறுப்பேற்று நடாத்தினார். இப்பயிற்சியின் இறுதி நாளில் தீப்பாசறை நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திவுப்பகுதி கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

ஊர்காவற்றுறை, சனி

வருடந்தோறும் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரால் தீவுப்பகுதி எம். பி திரு. நவரெத்தினம் வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்படும்வருடாந்தக்கரபந்தாட்டப்போட்டி சென்ற வாரம் புளியங்கூடல் மகாமாரி, சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இக்கர பந்தாட்டப் போட்டியில் பங்கு சுற்றவிருக்கும் கழகங்களின் விபரம் வருமாறு:—

சரவணை நாவலர் விளையாட்டுக்கழகம்— ஊர்காவற்றுறை யுனைடெட் விளையாட்டுக்கழகம் "டைமல்ஸ்" ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் — [ஆ] —கரம்பன் விளையாட்டுக் கழகம்; சரவணை நாவலர் விளையாட்டுக்கழகம் — ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம். [அ]; புங்குடுதீவு சிவலைப்பிட்டி ச. ச. நிலையம் — புளியங்கூடல் விளையாட்டுக் கழகம்; ஊர்காவற்றுறை யுனைட்டட் விளையாட்டுக்கழகம் 'புளூஸ்' —கரம்பன் விளையாட்டுக் கழகம்.

தம்பாட்டி காந்திஜி ச. ச. நிலையம் (அ)—ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் [அ]; ஊர்காவற்றுறை யுனைடெட் விளையாட்டுக்கழகம் "டைமலட்ஸ்"—ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் [அ]; தம்பாட்டி காந்திஜி ச. ச. விளையாட்டுக் கழகம் [ஆ]—புளியங்கூடல் விளையாட்டுக் கழகம், தம்பாட்டி காந்திஜி ச. ச. வி கழகம் [அ] ஊர்காவற்றுறை யுனைடெட் விளையாட்டுக்கழகம்.

அடுத்தமாதம் இறுதி மூன்று நாட்களிலும் நடைபெறும் போட்டி விபரம் வருமாறு:-

11-ம்திகதி ,அ' பிரிவுத் தெரிவுக்குழு.—'இ' பிரிவுத் தெரிவுக்குழு. 12-ந்திகதி ஆ பிரிவுத் தெரிவுக்குழு. 'இ' பிரிவுத் தெரிவுக்குழு 13-ம் திகதி "ஆ" பிரிவுத் தெரிவுக்குழு "அ" பிரிவுத் தெரிவுக்குழு.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்கரபந்தாட்டப் போட்டியில் 'செற்றப்பிங்' விளையாட்டுக்கு ஏற்ற விதிகளும் பின்பற்றப்படுமென அமைப்பாளர் திரு. பே. பொன்னுச்சாமி தெரிவித்துள்ளார்.

# மாணவர்களிடமிருந்து தீய பழக்கம் அகற்றவழி

## டாக்டர் ஆலோசனை

நெடுந்தீவு, சனி

'விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதால் தீய பழக்கங்கள் அவர்களிடமிருந்து மறைவதுமின்றி திடகாத்திரமான உடம்பையும் நோயற்ற வாழ்வையும் பெற்றுவிடுவார்கள்.'

இவ்வாறு புங்குடுதீவுமகாவித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு தலைமைதாங்கி உரையாற்றும்போது டாக்டர் பி. சிவசோதி கூறினார்.

இப்படியான போட்டிகள் மூலம் ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகிய நற்பழக்கங்களும் உருவாகிவிடும் என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இப்போட்டியில் முதலாம் இடத்தை 204 புள்ளிகளைப்பெற்று மஞ்சள் இல்லமும் இரண்டாம் இடத்தை 195 புள்ளிகளைப் பெற்று சிவப்பு இல்லமும் மூன்றும் இடத்தை 192 புள்ளிகளைப் பெற்று பச்சைஇல்லமும் தட்டிக்கொண்டன,

வெற்றிபெற்றவர்களின் விபரம் வருமாறு:- கீழ்ப் பிரிவு ஆண்கள். மு. அரியராசா [பச்சை இல்லம்]. மத்தியபிரிவு ஆண்கள்: இ தியாகலிங்கம் [சிவப்பு இல்லம்]. மேற்பிரிவு ஆண்கள்: சி. தனபாலசுந்தரம் [மஞ்சள் இல்லம்]. கீழ்ப்பிரிவு பெண்கள்: செல்வி செ. மங்களம்மா [பச்சை இல்லம்], செல்வி க. அருந்ததிதேவி [சிவப்பு இல்லம்]. மத்திய பிரிவுபெண்கள்: செல்வி தா. இராசலட்சுமி [சிவப்பு இல்லம்]. மேற்பிரிவு பெண்கள்: செல்வி வி. கோசலாதேவி [சிவப்பு].

தீவுப்பகுதி வட்டாரவித்தியாதரிசி திரு. ஏ. எஸ். நல்லையா, கல்லூரி அதிபர் திரு. சி. இராசநாயகம் ஆகியோர் இவ்வைபவத்தில் உரை நிகழ்த்தினர். திருமதி எஸ். சிவசோதி வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

# இங்கிலாந்து - மேற்கிந்திய நான்காவது கிரிக்கெட் 'டெஸ்ட்'

## கரபந்தாட்ட போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, சனி

புளியங்கூடல் மாகாமாரிசனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்டுவரும் நவரத்தினம் கேடயத்துக்கான கரபந்தாட்டப் போட்டியின் சில முடிவுகள் வருமாறு:—

ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் றேஞ்சர்ஸ விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. புள்ளி விபரம் 10—15, 15—9, 15—6. இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. பே. பொன்னுச்சாமி கடமையாற்றினார்.

சரவணைநாவலர் விளையாட்டுக் கழகத்துக்கும் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சரவணை நாவலர் கழகம் வெற்றிபெற்றது. புள்ளி விபரம் 16—14, 14—9 இப்போட்டிக்கு திரு. டி. எம். எம். வண்டா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## கிளித்தட்டு சுற்றுப்போட்டி

ஊர்காவற்றுறை, சனி

புளியங்கூடல்மகாமாரிசன சமூகநிலையத்தினர் கிளித்தட்டுப்போட்டியொன்றினை நடாத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

திரு. மு. செல்லத்துரையின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடாத்தப்படும் இப்போட்டியில் பங்கு பற்றவிரும்பும் கழகங்கள் இம்மாதம் 22-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

கிளித்தட்டுப் போட்டி நொக்கவுட் முறையில் நடைபெறுமெனவும், ஒவ்வொரு குழுவிலும் பத்து வீரர்கள் பங்குபற்றலாமெனவும் அறியப்படுகிறது.

## மேற்கிந்தியா 4 விக்கெட் நஷ்டத்துக்கு 479 ஓட்டங்கள்

போர்ட் ஒவ் ஸ்பெயின், மார்ச் 16

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையேயான 4-வது கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டியில் இரண்டாவது நாள் விளையாட்டின் இறுதியில், மேற்கிந்தியர் தமது முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்துக்கு 479 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

நேற்றைய ஆட்டத்தில், மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி, 2 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மேற்கிந்தியாவுக்காக ஆட்டத்தை ஆரம்பித்த தொடக்க ஆட்டக்காரரான ஸ்டீவ் கமாச்சாவோவும், ஜோயி கருவும் இந்த 'டெஸ்ட்' போட்டித் தொடரிலேயே மேற்கிந்திய கோஷ்டிக்கான ஆகக் கூடுதலான முதல் விக்கெட் ஓட்டத் தொகையான 119 ஓட்டங்களை எடுத்த பின்னரே, இருவரும் தமது விக்கெட்டுகளை இழந்தனர்.

கடந்த 'டெஸ்ட்' விளையாட்டில் 57 ஓட்டங்களை எடுக்க 6 மணி நேரம் செலவழித்த மேற்கிந்திய ஆரம்ப துடுப்படிகாரரான கமாச்சோ, இந்த 'டெஸ்ட்' விளையாட்டில் 87 ஓட்டங்களை அடிக்க 175 நிமிடங்களை எடுத்தார். அவருடன் துடுப்பெடுத்தாடிய கரு, 36 ஓட்டங்களைப் பெற்றார். கமாச்சோவின் துடுப்படி மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

இவர்கள் ஆட்டமிழந்த பின்னர், மேற்கிந்திய ஆட்டக்காரரான ருேஹன் கான் ஹாயும், செய்மூர் நேர்சும் மேலும் பிரமாதமாக ஆடி, ரசிகப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியூட்டினர். கான் ஹாய், 153 ஓட்டங்களையும் நேர்ஸ் 136 ஓட்டங்களையும் தமது அபார ஆட்டத்தின் மூலம் பெற்றனர்.

இன்றும் நேற்றும் இரண்டு நாட்களும் மழை காரணமாக விளையாட்டு குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்கூட்டியே நிறுத்தப்பட்டது.

இன்றைய ஆட்டம் இறுதியில் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியின் காப்டன் கார்பீல்ட் சோபோசும், கிளைவ் லொயிடும் ஆடிக் கொண்டிருந்தனர். சோபோர்ஸ் 29 ஓட்டங்களையும், லொயிட் 36 ஓட்டங்களையும் பெற்று, ஆட்டமிழக்காமலிருந்தனர்.

இங்கிலாந்துக்கும், மேற்கிந்தியாவுக்குமிடையேயான முதல் மூன்று டெஸ்ட் விளையாட்டுகளும் இரு சாராருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

ஆகவே இரு கோஷ்டியினரும் இந்த நான்காவது 'டெஸ்ட்' போட்டியில் வெற்றி அல்லது தோல்வி என்ற இறுதியான முடிவை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் கொண்டுள்ளனர். இந் நான்காவது 'டெஸ்ட்' விளையாட்டு முடிவடைய இன்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன.

## ருவின்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் அரசடி ருவின்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும், கல்வியங்காடு விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ருவின்ஸ் கழகம் 14ஓட்டங்களால் வெற்றியீட்டியது- இப்போட்டி திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. [கா. நி


வாருங்கள்! கேளுங்கள்!! வாங்குங்கள்!!!



கொழும்பு விலைகளுக்கு

உங்கள் வீடு கட்டுவதற்குத் தேவையான

* கம்பி வகைகள், * பூட்டு பிணைச்சல்கள் * கூரைத் தகடுகள்,

* எஸ்-லோன் பைப்கள், இணைப்புகள்

எல்லா அளவுகளிலுமுள்ள "போல்ட்" ஆணிகள்

புதிய விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பெற்ற விசேஷ பூட்டு வகைகள்

இன்னும் உங்கள் வீடுகளுக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

" ஒரு முறை விஜயம் செய்தால் பலமுறை விஜயம் செய்வீர்கள்! "

"ஸ்டீல் சன்ஸ்"

( 'குரங்கு மார்க்' மண்வெட்டி, அரிவாள் ஆகியவற்றின் இலங்கையின் ஏகவிநியோகஸ்தர்கள் )

287 - 289, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 7035


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நெஸ்பிறே' விநியோகத்தில் சீர்கேடுகிடையாது'

## உணவு உதவி கட்டுப்பாட்டு அதிகாரி கூறும் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்டத்தில் 'நெஸ்பிறே' விநியோகத்தில் சீர்கேடு நிலவுவதாக பொது ஸ்தாபனங்களும், பொதுமக்களும் தெரிவித்த கண்டனங்களை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி மறுத்துள்ளார். குழந்தைகள் நெஸ்பிறே விநியோகத்தில் மோசடி நிலவுவதாக தெரிவிக்கப்பட்ட புகார்களை முற்ருக மறுத்த உதவிக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எம். வீரசிங்கம் இதுபற்றித்தெரிவித்திருப்பதாவது:-

கடந்த தடவை யாழ். மாவட்டத்துக்கு சுமார் 43,000 ருத்தல் டின்கள் 'நெஸ்பிறே' பாலிமாவு விநியோகிக்கவென உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவினால் வழங்கப்பட்டது. இவற்றில் சுமார் 41,000 ருத்தல் நெஸ்பிறே டின்கள் குழந்தைப் பிள்ளைக் கூப்பன்களுக்கே விநியோகிக்க வழங்கப்பட்டன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், உத்தரவு பெற்ற வர்த்தகர்களுக்கும் இவைகளை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. 95 வீதமான நெஸ்பிறே டின்களும் குழந்தைக்கூப்பன்களுக்கே வழங்கப்பட்ட போதிலும், குழந்தைக் கூப்பன்களில் 70 வீதமே இது போதுமானதாக இருக்கின்றது என்பதெல்லாம் தவருன கருத்துக்களையே கொடுக்கின்றது.

சுகவீனமுற்றவர்களுக்கு மட்டும் யாழ்ப்பாணம் உணவுக் கட்டுப்பாட்டிலாகாவினுல் பர்மிட் வழங்கப்படுகின்றது. இது பருத்தித்துறை, தெல்லிப்பளைப் பகுதிக் காரியாதிகாரிகள் அந்தோரிலும் வழங்கப்படுகிறது. வைத்தியச் சான்றுகள் வழங்கினுல் பர்மிட் வழங்கும்முறை கையாளப்படுகின்றது. இதில் மோசடி நிலவுவதாகக் கூறப்படுவதில் உண்மை இருக்கமுடியாது.

கிராமப் குதிகளில் விற்பனைக்கு வழங்கப்பட்ட 'நெஸ்பிறே' டின்களில் சுமார் 60 வீதமானவையும் விற்பனை செய்யப்படாமல் இருக்கின்றன. ஆனல் யாழ்ப்பாணப் பட்டினத்தில் முழுவதும் விற்பனையாகிவிடுகின்றன. அடுத்த தடவைகளில் கிராமப்பகுதிகளுக்குக் குறைத்தும், யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள கடைகளுக்கு கூட்டியும் 'நெஸ்பிறே'யை வழங்கினுல் தட்டுப்பாடு முற்ருக நீங்கலாமென்றும் இலங்கையிலேயே மாவட்ட ரீதியில் இங்குதான் கூடுதலான 'நெஸ்பிறே' வழங்கப்படுகிறதென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். [கா. நி]

## பாலைதீவை இணைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாலைதீவின் முன்னேற்றக் கருத்தில் கொண்டு பாலைதீவை, அல்லைப்பிட்டி கிராமசபையுடன் இணைத்துத்தருமாறு பாலதீவு மூப்பர் திரு. ஆ. ச. அந்தோனிப்பிள்ளை உள்ளூராட்சி சேவை ஆணையாளருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் கேட்டுள்ளார்.

## ஆட்கள் இல்லாத வீட்டுக்குள் புகுந்தார்களாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆட்கள் இல்லாத வீட்டில் புகுந்து பொருட்களைக் களவாடிய இரு வாலிபர்களை பிணையில் விடுதலை செய்ய யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு எம். ஜமீல் அனுமதித்தார்.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள ஒரு வீட்டில் நடைபெற்ற இக்களவு சம்பந்தமாக யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதி சார்ஜண்டினுல் பாலசுப்பிரமணியம், ஜெயரத்தினம் ஆகிய இரு வாலிபர்களும் கைது செய்யப்பட்டிருந்தார்கள். களவு போனதாகப் புகார் செய்யப்பட்ட சில பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போதே இவர்களை பிணையில் விடுதலை செய்த மாஜிஸ்டிரேட் அனுமதித்தார் (கா. நி)

## கச்சதீவுயாத்திரி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலல வேண்டாம் எனவும், மூன்றுதினங்களுக்கு மட்டும் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் உடைகளையும் மட்டும் கொண்டு செல்லவேண்டும் எனவும் காரியாதிகாரி தெரிவித்திருக்கிருர்.

கச்சதீவிலிருந்து திரும்புவோர் அங்கிருந்து பிற்பகல் 4 மணிக்குமுன் புறப்பட்டுவிடவேண்டும். வேறு இடங்களிலிருந்து கச்சதீவுக்குப் புறப்படும் படகுகளும் கச்சதீவிலிருந்து வேறு இடங்களுக்குப் புறப்படும் படகுகளும் கரையூர் இறங்குதுறைக்குச்செல்லவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (கா. நி.)

## தாயும்.........

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பறிக்க எடுத்த முயற்சியில் தோக்கின் கண்டவுடன் தானும் போத்தலில் இருந்த மிகுதியைக் குடித்ததாகவும் இருவரும் மயங்கி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப் பட்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு உதவி வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். நரேந்திரகுமார் சாட்சியமளிக்கையில் விரைவில் கொண்டுவந்திருந்தால் உயிர்களை காப்பாற்றியிருக்கலாம் என்றும் இருமிநாசினி குடித்தே மரணம் ஏற்பட்டதென்றும் கூறினுர்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலைஎனத் தீர்ப்பு வழங்கினுர். பொலிஸ் சார்பில் [illegible] கஸ்தூர் இரு [illegible] ணா சாட்சியங்களைப் பதிவு செய்தார்.

# வடபகுதி பௌத்தர்களுக்கு தனியான குடியேற்றத்திட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் வசிக்கும் பௌத்த மக்களுக்கெனத் தனியான குடியேற்றத் திட்டம் ஒன்று விரைவில் இங்கு அமைக்கப்படலாமென தெரிகின்றது. இதற்கான சில முன்னேற்பாடுகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மேற்கொண்டுள்ளார்.

வடபகுதி பௌத்த சங்கத்தினர் அரசாங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. இங்கு கடந்த பலவருட காலமாக காணியின்றி வசித்துவரும் பௌத்த மத மக்களுக்கு தனியான ஒரு குடியேற்றத் திட்டம் தேவையென இவர்கள் அரசாங்கத்திடம் கோரியிருந்தனர்.

யாழ்' மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமசேவையாளர் பகுதியிலும் வசிக்கும் பௌத்த மக்கள் பற்றிய பூரண விபரங்களும் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை சேகரிக்கப்பட்டதன்படி கடந்த 15 வருடத்திற்கு மேலாக இங்கு சுமார் 400 பௌத்த குடும்பங்கள் வசித்துவருவதாகத் தெரியவந்துள்ளது.

இங்கு நாவற்குழியிலேயே இத்திட்டம் அமுலாக்கப்படுமென நம்பகரமாகத் தெரியவந்துள்ளது. இது பற்றிய முடிவுகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (கா. நி.)

## யாழ்ப்பாணத்தில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கைகுலுக்கி வரவேற்ருர். பின்னர் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் எஸ். வி. பாலசிங்கம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் சிலரும் அதிக ஆடம்பரமற்றமுறையில் அவரை வரவேற்றனர்.

நாளை நண்பகல் வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் ஷேர்லி கொரியா அரசாங்க அதிபரின் விருந்தினராக இருப்பார்.

## இரவல் இருதயகாரர் வீடுதிரும்பினுர்

கேப்டவுண், மார்ச் 16

கறுப்பர் ஒருவரின் இருதயம் பொருத்தப்பட்டு கேப்டவுண் குரூட் ஸ்சூர் ஆஸ்பத்திரியில் 74 நாட்கள் சிகிச்சை பெற்றுவந்த டாக்டர் பிளேய்பேர்க் [வயது 68] பூரணசுகத்துடன் இன்று தமது வீடுதிரும்பியுள்ளார். இவர் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய சமயம் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் இவரை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

உலகத்தில் உயிரோடு இருக்கும் ஒரேயொரு இரவல் இருதயகாரர் இவரேயாவர். பூரண சுகத்துடன் வீடு திரும்பியபோதிலும், இவரது உடல்நலத்தைத் தொடர்ந்தும் டாக்டர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

## ரூபா 165 அபராதம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த பீ. ஏ. எஸ். சி. பெர்னுண்டோ என்பவர் தனது வீட்டில் கசிப்பு தயாரித்ததாக முல்லைத்தீவு கலால் பரிசோதகர் திரு. கே. பீ. திசநாயகாவால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர் நவரத்தினம் ரூபா 165 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## 'சிலம்பொலி' மீது உரிமைப் பிரச்னை

சென்னை, மார்ச் 16

சட்டசபை சம்பந்தமான செய்தி யொன்றினை வெளியிட்டதில் சபை உரிமையில் தலையிட்டதாக 'சிலம்பொலி' என்ற பத்திரிகை மீது தி. மு. க. பிரதிநிதி திரு. தர்மலிங்கம் சபையில் குற்றஞ்சாட்டி உரிமைப் பிரச்னை யொன்றைக் கிளப்பினுர்.

செய்தி முதல் வாசகத்திலேயே உரிமையை மீறியிருப்பது தெரிகின்றதென்று ஆனல் அப்பத்திரிகைக்கு அதிக விற்பனை இல்லாதிருப்பதால் எச்சரிக்கைசெய்வதுடன் பிரச்னையைக் கைவிடுவதாக உபசபாநாயகர் புலவர் குழந்தை அறிவித்தார்.

## அண்ணு மட்டுமே விண்ணப்பம்

சென்னை, மார்ச் 16

தமிழ்நாடு மேல் சட்டசபைக்கு ஸ்தலஸ்தாபனத் தொகுதியில் காலியான இடத்துக்கு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை மட்டுமே அபேட்சா பத்திரம் தாக்கல் செய்துள்ளார். வேறு எவரும் அபேட்சா பத்திரம் தாக்கல் செய்யாததால் அத்தொகுதிக்கு திரு அண்ணுதுரை தெரிவுசெய்யப்பட்டதாக உத்தியோகபூர்வமாக 18-ம் திகதி அறிவிக்கப்படும்.

## 16 பேர் எரிக்கப்பட்டனர்

புதுடில்லி, மார்ச் 16

மைசூரில் ஒரு கிராமத்தில் ஒரு பெண் உட்பட 16 பேர் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

நீண்டகாலக்காணித்தகராற்றின் விளைவாக இக்கொலை இடம்பெற்றதாகச் சொல்லப்படுகின்றது.

## பிரதமருக்கு தந்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மக்கள் தமது ஜனநாயகஉரிமைகளை இழந்து பல தொல்லைகளுக்கும் ஆளாகி வருவதால் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு யாழ். மாநகரசபை வரியிறுப்பாளர்கள் சிலர் பிரதமரை தந்தி மூலம் கேட்டுள்ளனர்.

தேர்தலை விரைவில்நடாத்துவதாக அரசாங்கம் பல தடவைகள் கொடுத்த வாக்குறுதி இன்னமும் நிறைவேற்றப்படவில்லையென்றும், ஆணையாளர் ஆட்சியில் மந்தைகளை ஒழிப்பதால் இவர்கள் காட்டும் கூடிய சிரத்தையால் இங்குள்ள மக்கள் பலரும் அவதிப்படுவதாகவும் இத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி]

## நியமனம்

அனுராதபுரம், சனி

அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் கனிஷ்டபிரிவுக்கு திரு. சி. குலசேகரம் தலைமை ஆசிரியராக நியமிக்கப் பட்டுள்ளார்.

# தொதிநீர் ஊற்றி குழந்தையைக் கொன்ருர்

## தந்தைக்கு 15 வருடச்சிறை

ஜெனிவா, மார்ச் 16

தாம்பெற்றெடுத்த 7மாத குழந்தையை கொதிநீர்ஊற்றிக் கொலைசெய்ததற்காக சுவிற்சர்லாந்தில் ஒரு தந்தைக்கு நீதிபதி 15 வருட சிறைத் தண்டனை விதித்தார்.

நீதிபதி தமது தீர்ப்பின் போது தாம் நீதிபதிப் பதவியை ஏற்ற 22 வருடகாலத்தில் இவ்வித கொடுமையான சம்பவம்பற்றிக் கேள்விப்படவில்லையெனக் குறிப்பிட்டார்.

23 வயதுடைய மேற்படி தந்தை ஒருவருடம் தனிமையில் காலம்கழிக்கவேண்டுமெனவும் இதேபோன்று குழந்தையின் தாயும் ஒரு வருட தனிமைச்சிறை அனுபவிக்கவேண்டுமெனவும் தீர்ப்பளித்தார்.

## கட்டணம்...

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

டேயாகும்.

திருமதி அபயசேகரா அவர்களுக்கும் நான் ஒரு விசேஷ வரவேற்பு கூறவிரும்புகிறேன். எமது மாவட்ட அதிபரின் மனைவியாக தாங்கள் தமிழ்நாடகவளர்ச்சிக்கு செய்த தொண்டு பாராட்டுதலுக் குரியது. தங்களிடம் பரிசுபெறும் மாணவ மாணவிகளில் பலர் இந்த சந்தர்ப்பத்தை என்றென்றும் மறக்க மாட்டார்கள்.

இந்த தேசிய அரசாங்கத்தின் காலத்தில் தனிப்பட்ட சம்பளம் எடுக்காத பாடசாலைகள் சம்பளம் எடுக்கும் சலுகை வழங்கப்படும்என்று நாம் எதிர்பார்த்திருக்கிறோம். தனிப்பட்ட பாடசாலைகளுக்கு பாடத்திட்டங்களும் வேலை முறைகளும் பாட முறைகளும் கல்வி இலாகாவினுல் வழங்கப்படவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். கல்வி இலாகா கூட்டும் மாநாடுகளுக்கு எமது ஆசிரியர்கள் குறைவாகவேஅழைக்கப் படுகிருர்கள் ஆகையால் ஒருதேசிய கல்வி முறைக்கு நாம் இயங்க முடியவில்லை. இப்பாடசாலை மாணவ மாணவிகளுக்கு மிகவும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மாறிவரும் இவ்வையகத்துக்கும் பொருத்தமானஒரு புதிய கல்வித்திட்டம் உருவாக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

## புதிய தொலைபேசி இலக்கம்

"ஈழநாடு" கொழும்புக் காரியாலயத்தின் புதிய தொலைபேசி இலக்கம் 86811 என்பதை 'ஈழநாடு' வாசக நேயர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம். ஈழநாடு பத்திரிகை விநியோகம், விற்பனை, விளம்பரம் சம்பந்தமாகக் கொழும்பிலும் அதன் சுற்றிப்புறங்களிலுமுள்ளவர்கள் கொழும்பு 86811 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org